## சுருக்கம்

பள்ளிக் கல்வி – அரசு / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி கற்கும் மாணவ / மாணவியரின் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ பாதிக்கப்படுகின்ற அந்த மாணவ / மாணவியர் ஒவ்வொருவருக்கும் நிதியுதவி ரூ.75,000/– வழங்கும் திட்டத்தினை 2019–2020–ஆம் ஆண்டு செயல்படுத்த நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

..........................................................................................................................

பள்ளிக் கல்வித் [பக5(2)] துறை

அரசாணை (நிலை) எண்.189 நாள் : 25.10.2019.

திருவள்ளுவராண்டு 2050,
விகாரி, ஐப்பசி 8.

படிக்கப்பட்டவை :

1. அரசாணை (நிலை) எண்.39, பள்ளிக் கல்வி(இ2)த் துறை, நாள் 30.03.2005.
2. அரசாணை (நிலை) எண்.127, பள்ளிக் கல்வி(இ2)த் துறை, நாள் 01.07.2005.
3. அரசாணை (நிலை) எண்.195, பள்ளிக் கல்வி[பக5(2)]த் துறை, நாள் 27.11.2014.
4. அரசாணை (நிலை) எண்.104, பள்ளிக் கல்வி[பக5(2)]த் துறை, நாள் 25.05.2017.
5. அரசாணை (நிலை) எண்.234, பள்ளிக் கல்வி [பக5(2)]த் துறை, நாள் 14.11.2017
6. அரசாணை (நிலை) எண்.52, பள்ளிக் கல்வி[பக5(2)]த் துறை, நாள் 08.03.2019.
7. தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.20247/ கே3/2017,நாள் 05.04.2019.
8. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.019321/எம்/இ2/2017, நாள் 02.07.2019.

.........

ஆணை :–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், அரசு / அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியரின் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ பாதிக்கப்படுகின்ற மாணவ / மாணவியர் ஒவ்வொருவருக்கும் ரூ.50,000/– நிதி உதவி வழங்கப்படும் என்றும், இந்த நிதி அரசு நிதி நிறுவனங்களில் வைப்புத் தொகையாக செலுத்தப்பட்டு, அதிலிருந்து கிடைக்கின்ற வட்டித் தொகை மற்றும் அதன் முதிர்வுத் தொகை ஆகியவை அந்த மாணவ / மாணவியரின் கல்விச் செலவிற்காகவும், அவர்களது பராமரிப்புக்காகவும் பயன்படுத்தப்படும் என்றும், இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான விரிவான அறிவுரைகள் தனியே வெளியிடப்படும் என்றும் ஆணைகள் வெளியிடப்பட்டன. இதனைத் தொடர்ந்து, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மேற்கண்ட திட்டத்தினை செயல்படுத்த தேவையான நிதி ஒதுக்கீடும், அதற்குரிய வழிகாட்டு நெறிமுறைகளும் வகுக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டன.

(த.பி.பா)

2. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மேற்காண் திட்டத்தின்கீழ் மாணவ / மாணவியர்களுக்கு வழங்கப்படும் தொகை ரூ.50,000/–லிருந்து ரூ.75,000/– ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மேற்காண் திட்டத்திற்கென 2016–17 ஆம் ஆண்டு வரவு–செலவு திட்டத்தில் ரூ.3.70 கோடி (தொடக்கக் கல்வி இயக்ககம்–ரூ.1.00 கோடி மற்றும் பள்ளிக்கல்வி இயக்ககம்–ரூ.2.70 கோடி) ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிலையில், இத்திட்டத்திற்கென நிலுவையாக இருந்த விண்ணப்பங்களுக்கு நிதியுதவி வழங்கிட தேவைப்படும் கூடுதல் தொகையான, தொடக்கக் கல்வி இயக்ககத்திற்கு ரூ.4,20,00,000/–ம்; பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு ரூ.80,00,000/–ம்; ஆக மொத்தம் ரூ.5,00,00,000/– (ரூபாய் ஐந்து கோடி மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. மேலும், இனிவரும் ஆண்டுகளில் அரசிடம் அரசாணை பெற்று நிதி ஒப்பளிப்பு செய்யப்பட வேண்டும் என்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் ஆகியோருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

4. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2017–18–ஆம் ஆண்டு வரவு–செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில், ரூ.3.70 கோடி (ரூபாய் மூன்று கோடியே எழுபது இலட்சம் மட்டும்) (தொடக்கக் கல்வி இயக்ககத்திற்கு ரூ.1.00 கோடி (ரூபாய் ஒரு கோடி மட்டும்) மற்றும் பள்ளிக்கல்வி இயக்ககத்துக்கு ரூ.2.70 கோடி (ரூபாய் இரண்டு கோடியே எழுபது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அத்தொகையினை சம்பந்தப்பட்ட இயக்ககத்தின் சார்பில் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திற்கு பெற்று வழங்கிடவும் அனுமதி வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், இனிவரும் ஆண்டுகளில் இத்திட்டத்திற்கென வரவு–செலவு மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகைக்கு (உண்மையான செலவினத்திற்கு) ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒப்பளிப்பு வழங்குவது குறித்து அரசிடம் அரசாணை பெற்ற பின்னர், செலவினம் மேற்கொள்ள வேண்டும் என்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் ஆகியோருக்கு அறிவுறுத்தி ஆணையிட்டுள்ளது.

5. மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், இத்திட்டத்திற்கென வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகைக்கு ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒப்பளிப்பு பெற்ற பின்னர், செலவினம் மேற்கொள்ள வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு, 2018–19–ஆம் ஆண்டில் அரசு / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1–ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியரின் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ பாதிக்கப்படுகின்ற மாணவ / மாணவியர் ஒவ்வொருவருக்கும் நிதியுதவி வழங்கும் திட்டத்திற்கென தொடக்கக் கல்வி இயக்ககத்திற்கு ரூ.2.00 கோடி (ரூபாய் இரண்டு கோடி மட்டும்) மற்றும் பள்ளிக்கல்வி இயக்ககத்திற்கு ரூ.2.70 கோடி (ரூபாய் இரண்டு கோடியே எழுபது இலட்சம் மட்டும்) ஆக மொத்தம் ரூ.4.70 கோடி (ரூபாய் நான்கு கோடியே எழுபது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அத்தொகையினை சம்பந்தப்பட்ட இயக்ககத்தின் சார்பில் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திற்கு பெற்று வழங்கிடவும் அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

(த.பி.பா)

6. தற்போது, மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, பள்ளிக் கல்வி இயக்குநர், தனது 02.07.2019 நாளிட்ட கடிதத்தில், 2018–2019–ஆம் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.2.70 கோடி ஒப்பளிப்பு செய்து வழங்கப்பட்டது எனவும், இத்தொகை தமிழ்நாடு மின் விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திற்கு அண்ணாசாலை பாரதஸ்டேட் வங்கி, கருவூலக் கிளை காசோலை எண்.554870, நாள்.26.03.2019–ன்படி பெற்று வழங்கப்பட்டது எனவும், மேலும், 2018–2019–ம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 2.70 கோடி வழங்கியதுபோக, 31.05.2019 நிலவரப்படி, மொத்தம் 550 தகுதியுடைய விண்ணப்பங்களுக்கு ரூ.3,87,50,000/– அரசிடமிருந்து நிதி ஒதுக்கீடு பெற்றுத் தருமாறு கோரப்பட்டதாகவும், 550 தகுதியுடைய விண்ணப்பங்களில், 529 தகுதியுடைய விண்ணப்பங்களுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட வேண்டிய தொகை ரூ.3,71,75,000/– போக, கூடுதலாக உள்ள 21 தகுதியுடைய விண்ணப்பங்களுக்கு தேவைப்படும் தொகை ரூ.15,75,000/– ஆகும் எனவும், இத்தொகையோடு, ஏற்கெனவே நிலுவையில் உள்ள (529 விண்ணப்பங்களுக்கான) தொகை ரூ.3,71,75,000/– தொகையோடு சேர்த்து மொத்தம் 550 (529+21=550) விண்ணப்பங்களுக்கான தொகை ரூ.3,87,50,000/– அரசிடமிருந்து பெற்று வழங்குமாறும், மேலும், வைப்புநிதி பத்திரங்கள் வழங்காமல் காலதாமதம் ஏற்படுவதாலும், இப்பிரச்சனைக்கான குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்றால், 2019–2020–ஆம் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டத் தொகை ரூ.2.70 கோடியினை ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறும், அரசைக் கோரியுள்ளார். அவ்வாறே, தொடக்கக் கல்வி இயக்குநர், தமது 05.04.2019 நாளிட்ட கடிதத்தில், 2018–2019–ஆம் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.2.00 கோடி மட்டுமே ஒப்பளிப்பு செய்து வழங்கப்பட்டது எனவும், இத்தொகை ECS மூலமாக தமிழ்நாடு மின் விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது எனவும், ஆனால், 810 விண்ணப்பங்கள் 31.07.2018 அன்றைய நிலவரப்படி, நிலுவையாக உள்ளது எனவும், தற்போது ரூ.2.00 கோடி வழங்கியது போக, மீதம் ரூ.3,08,75,000/–க்கான விண்ணப்பங்கள் நிலுவையாக உள்ளதாகவும், அதனை அரசிடமிருந்து பெற்று வழங்குமாறும், மேலும், வைப்புநிதி பத்திரங்கள் வழங்காமல் காலதாமதம் ஏற்படுவதாலும், இப்பிரச்சனைக்கான குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்றால், 2019–2020–ஆம் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டத் தொகை ரூ.2.00 கோடியினை ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறும், அரசைக் கோரியுள்ளார்.

7. பள்ளிக் கல்வி இயக்குநர் / தொடக்கக் கல்வி இயக்குநர் ஆகியோரது கருத்துருக்களை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று, இத்திட்டத்திற்கென வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகைக்கு ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒப்பளிப்பு பெற்ற பின்னர், செலவினம் மேற்கொள்ள வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு, 2019–20–ஆம் ஆண்டில் அரசு / அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1–ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியரின் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ பாதிக்கப்படுகின்ற மாணவ / மாணவியர் ஒவ்வொருவருக்கும் நிதியுதவி வழங்கும் திட்டத்திற்கென தொடக்கக் கல்வி இயக்ககத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.2.00 கோடி (ரூபாய் இரண்டு கோடி மட்டும்) மற்றும் பள்ளிக்கல்வி இயக்ககத்திற்கு ரூ.2.70 கோடி (ரூபாய் இரண்டு கோடியே எழுபது இலட்சம் மட்டும்) ஆக மொத்தம் ரூ.4.70 கோடிக்கு மட்டும் (ரூபாய் நான்கு கோடியே எழுபது இலட்சம் மட்டும்) தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திற்கு பெற்று வழங்கிட அனுமதி வழங்கி ஆணையிடுகிறது.

(த.பி.பா)

8. மேலே பத்தி 7–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்கண்ட கணக்கு தலைப்புகளின்கீழ் பற்று வைக்கப்படும்:–

(i) <u>தொடக்கக் கல்வி இயக்ககம் ரூ.2,00,00,000/–</u>

2202 – பொதுக்கல்வி – 01 – தொடக்கக் கல்வி – 800 – ஏனைய செலவு – மாநிலச் செலவினங்கள் – BB அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1–ஆம் வகுப்பு முதல் 8–ஆம் வகுப்பு வரை கல்வி கற்கும் மாணவ / மாணவியரின் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்தாலோ, நிரந்தர முடக்கம் அடைந்தாலோ பாதிக்கப்படும் மாணவ / மாணவியர்களுக்கு நிதியுதவி வழங்குதல் – தொடக்கக் கல்வி இயக்குநர் கட்டுப்பாட்டில் உள்ளவை – 09 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (த.தொ.கு.2202 01 800 BB 30903)

(ii) <u>பள்ளிக் கல்வி இயக்ககம் ரூ.2,70,00,000/–</u>

2202 – பொதுக்கல்வி– 02 – இடைநிலைக் கல்வி – 800 – ஏனைய செலவு – மாநிலச் செலவினங்கள் – JP அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 9–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை கல்வி கற்கும் மாணவ / மாணவியரின் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்தாலோ, நிரந்தர முடக்கம் அடைந்தாலோ பாதிக்கப்படும் மாணவ / மாணவியர்களுக்கு நிதியுதவி வழங்குதல் – பள்ளிக் கல்வி இயக்குநர் கட்டுப்பாட்டில் உள்ளவை – 309 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (த.தொ.கு.2202 02 800 JP 30903).

9. மீதமுள்ள தொகையை ஒப்பளிப்பு செய்வது குறித்து தொடக்கக் கல்வி மற்றும் பள்ளிக் கல்வி இயக்ககம், 2014–15 முதல் 2018–19 வரை இத்திட்டத்திற்கென மேற்காணும் நிதி நிறுவனத்திற்கு அனுப்பிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை பெற்று வழங்கிய தொகை, செலவழிக்கப்பட்ட தொகை, நிலுவையில் உள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை போன்ற விரிவான விவரங்களை சம்பந்தப்பட்ட உதவி கல்வி அலுவலர் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர் ஆகியோரிடமிருந்து பெற்று பரிசீலித்த பின்னர், அதன் விவரங்களை அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் பள்ளிக் கல்வி இயக்குநர் / தொடக்கக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இவ்வாணை, நிதித் (கல்வி–2) துறையின் அ.சா.எண்.52015/கல்வி–II/2019, நாள் 22.10.2019–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இயக்குநர், சென்னை–6.
மாநில கணக்காயர், சென்னை–18 / 35.
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், சென்னை–35.

(த.பி.பா)

அனைத்து சம்பளக் கணக்கு அலுவலர்கள்.
அனைத்து கருவூல அலுவலர்கள்.
ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத் துறை, சென்னை–15.

<u>நகல்</u>

நிதி (கல்வி–II/ வ.செ/பொது. I /II) துறை, சென்னை–9.
அரசு செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளர், பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை, சென்னை–9.
அரசு செயலாளர், சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை,சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளர், சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை, சென்னை–9.
இயக்குநர், சமூக நலத்துறை, சென்னை–5.
இயக்குநர் ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை, சென்னை–5.
ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சென்னை–5.
இயக்குநர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை, சென்னை–5.
ஆணையர், சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை–2.
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், பனகல் மாளிகை, சென்னை–15.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின்அலுவலகம்,சென்னை–9
செயலாளர் அவர்களின் முதுநிலை முதன்மைத் தனிச்செயலர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9.
பள்ளிக் கல்வி (வரவு செலவு / அநமு ) த்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

/ ஆணைப்படி / அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர். 25-10-19
25/10/19